1970 மார்ச் 24]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இப்போது இருக்கும் பிரச்சினை என்னவென்றால், தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் சிமெண்டை விற்பனை செய்வதில் கஷ்டம் இருக்கிறது. ஆகவேதான், மீண்டும் இந்த உற்பத்தியைப் பெருக்குவது கூடாது என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே 9 ஆலைகளுக்கு ஏற்பாடு செய்தாலும்கூட, தொடங்குவதிலே தயக்கம் காட்டுகிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள வள்ளியூர் பகுதியில் ஒரு சிமெண்ட் ஆலை நிறுவ லைசென்ஸ் வழங்கப்பட்டிருந்ததே, அது என்ன ஆனது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஒரு லட்சம் டன்னுக்கு லெட்டர் ஆஃப் இன்டென்ட் கிராண்ட்டட் என்ற வகையில் டாக்டர் பி. நடராஜன் என்பவருக்கு வள்ளியூரில் கொடுக்கப்பட்டிருக்கிறது. முன்னாலே சிமெண்ட் தொழிற்சாலையில் பாதகம் ஏற்பட்ட காரணத்தாலே கொஞ்சம் தயக்கம் காட்டுவதுபோல் தெரிகிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த 9 இடங்களிலே சேதாரம்பட்டு, பாண்டிசேரிக்கு அருகில் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பாண்டிச்சேரி ஸ்டேட் வேறு, நம்முடைய ஸ்டேட் வேறு. அந்தத் தொழிற்சாலை நம்முடைய ஸ்டேட்டைச் சேர்ந்ததா, இல்லையா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, நான், 'சேதாரம்பட்டு அண்ட் வானூர்' என்றுதான் சொன்னேன். வானூர் கனம் உறுப்பினருடைய தொகுதி. அது பாண்டிச்சேரிக்குப் பக்கத்தில் இருப்பதால் அப்படிக் குறிப்பிட்டுச் சொன்னது.

Expansion of border highways.

* 522 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the State Government has approached the World Bank for the expansion of the border highways?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மைசூர் எல்லை கிருஷ்ணகிரி–சேலம் வழியாகச் செல்லும் 7-ஆம் எண் தேசிய நெடுஞ்சாலையையும், சேலம்–கோயம்புத்தூர்–கோள எல்லை வழியாகச் செல்லும் 47-ம் எண் தேசிய நெடுஞ்சாலையையும் மேம்படுத்துவதற்காக உலக வங்கியின் உதவியை நாடும் செயற்குறிப்பை இந்திய அரசு ஆராய்ந்து வருகிறது. அது ஆய்வு நிலையில் உள்ளது.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister the estimated cost of the roads and from where, the roads have been proposed to be repaired?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Detailed preliminary proposals for strengthening and widening to two lanes standard of National Highways No. 7 and No. 47 at a cost of Rs. 570 lakhs and Rs. 590 lakhs respectively have been sent to the Government of India.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, வேலூருக்கு அருகில் சென்னையிலிருந்து பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையை விஸ்தரிக்க வேண்டுமென்று தமிழ்நாடு அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்திருக்கிறதா? தற்போது அந்தச் சாலையில் போக்குவரத்து நெரிசலாக இருக்கிறதென்று சொல்லப்படுகிறதே, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, சென்னை-பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையைப்பற்றி செயற் குறிப்பு இல்லை.

Bridge across Cauvery in Tiruchirappalli

*523 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state the steps taken by the Government to ease the traffic problem on the Tiruchirappalli bridge on the Cauvery?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திருச்சிராப்பள்ளி நகரத்தில் காவிரியாற்றுப் பாலத்தின் மீது வண்டிப் போக்குவரத்துச் சிக்கலை எளிதாக்கக் கீழ்க்காணும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன :—

(அ) வண்டிப் போக்குவரத்தை முறைப்படுத்த காவிரிப் பாலத்தின் இரு முனையிலும் காவலர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர்.

(இ) பாலத்தின் மீது வண்டிகள் ஒருவழி மட்டுமே செல்ல அனுமதிக்கப்படுகின்றன.

(உ) காவிரிப்பாலத்தின் இருமருங்கிலும், போக்குவரத்தை ஒழுங்குப்படுத்தும் பொருட்டு ஸ்ரீரங்கத்திலுள்ள லயன்ஸ் கிளப் தானியங்கும் போக்குவரத்து அடையாளக்குறிகளை நிறுவ முன் வந்தது. அதனை ஏற்றுக் கொள்ளுமாறு அரசு சென்னை (நெடுஞ்சாலைகள்-கிராமப்பணிகள்) தலைமைப் பொறியாளருக்கு அனுமதி வழங்கியுள்ளது.

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே காவேரி பாலமானது தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையிலிருந்து தெற்குக் கோடி வரையில் செல்லுகின்ற ரஸ்தாவில் உள்ளது. இந்தப் பாலத்தை அகலப்படுத்தினால் அல்லது அதன் பக்கத்தில் மற்றொரு பாலத்தைக் கட்டினால் இப்பொழுதுள்ள பேக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க முடியும். இதன் காரணமாக வியாபாரம் அதிகமாக நடைபெறும், விவசாயிகளுக்கு அதிக பயனைத் தரும் என்பதை மனதில் கொண்டு, பாலத்தை அகலப்படுத்தும் முயற்சியில் அல்லது வேறொரு பாலத்தைக் கட்டும் முயற்சியில் இறங்க இந்த அரசாங்கம் முன்வருமா?